ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1954/7 - 2016 පෙබරවාරි මස 15 වැනි සඳුදා - 2016.02.15
1954/7 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## துணை விதிகள்

### மத்திய மாகாண மாகாண சபை

.................. நகர சபை

**இடர் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் கீழ் மத்திய மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் மேற்காட்டிய பந்தியின் கீழ் இத்தால் வெளியிடப்படுகின்றது.

(255 ஆவது அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 157 ஆவது பிரிவுக்கமைய இடர் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணை விதிகளை விதிப்பதற்கென நகர சபைகளுக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் துணை விதிகளை மத்திய மாகாணத்தின் நகர சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

சரத் ஏக்கநாயக்க,
மத்திய மாகாண முதலமைச்சரும்
உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.

மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,
பல்லேகல,
2016, சனவரி 05.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அனர்த்த முகாமைத்துவம் பற்றிய துணைவிதி

துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.

*1.* (255 ஆம் அத்தியாயமான) நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 153 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 157 ஆம் பிரிவின் கீழ் நகர சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்துணை விதி ஆக்கப்பட்டுள்ளது.

*2.* இத்துணைவிதியானது, அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய எழுத்து மூலமான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு குறைநிரப்பியாகவேயன்றி, குறித்த ஏதேனும் ஏற்பாடுகளின் தத்துவத்தைக் குறைப்பதாகவோ அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கு பதிலீடாகவோ அமையுமெனக் கருதுதலாகாது.

துணைவிதியின் பெயர்.

*3.* இத்துணை விதியானது, நகர சபை ஆளுகைப் பிரதேசத்தின் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய துணைவிதியென எடுத்துக் காட்டப்படலாம்.

நோக்கம்.

*4.* நகர சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழ்வதற்கு சாத்தியமுள்ள அனர்த்த சந்தர்ப்பங்களை குறைத்தல், அத்தகைய ஏதேனும் அனர்த்தத்தின்போது அசௌகரியத்துக்கு உள்ளாக்கின்ற ஆட்கள் அல்லது உள்ளாவதற்கு சாத்தியமுள்ள ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் பிரதேச சபைகள் ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்த சந்தர்ப்பங்களில் அதனை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் முன்கூட்டித் தயாராகுவதற்கும் அனர்த்த ஆபத்தை குறைப்பதற்கும் நடைமுறைப்படுத்த வேண்டிய பூர்வாங்க அனர்த்த செயற்பாடுகளுக்கும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான அனைத்து விடயங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமாக இத்துணை விதி ஆக்கப்படுகின்றது.

நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள்.

*5.* நகர சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அத்தகைய ஏதேனும் அனர்த்த நிலைமையொன்று நிகழ்கின்ற போது அத்தகைய அனர்த்தங்களுக்கு ஆளான அல்லது ஆளாகக் கூடிய ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் அனர்த்த ஆபத்தை குறைப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பூர்வாங்க மூலோபாயங்களைத் தீர்மானித்தல் ஆகியன நகர சபை அனர்த்த முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

*6.* குழுவின் அமைப்பு.-

5 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 23க்கு மேற்படாதிருத்தல் வேண்டும் என்பதோடு பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் அத்தகைய அங்கத்தவர்கள் பின்வரும் ஆட்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :-

(i) குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய நகர சபையின் தவிசாளர்;

(ii) குழுவின் செயலாளராக இருக்க வேண்டிய நகர சபையின் செயலாளர்;

(iii) ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் மாதம் பேரவைக் கூட்டத்தில் எதிர்வரும் ஆண்டுக்காக வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்து நியமிக்கப்படும் நகர சபையின் நான்கு உறுப்பினர்கள்;

(iv) நகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ;

(v) நகர சபையின் தீயணைப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்/பிரதான தீயணைப்பு சிப்பாய்;

(vi) 2005 ஆம்ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(vii) சபைப் பிரதேசம் உள்ளடங்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(viii) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(ix) சபைப் பிரதேசம் உள்ளடங்குகின்ற பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(x) ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் மாதம் பேரவைக் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலம் எதிர்வரும் ஆண்டுக்காக தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற –

(அ) குறைந்தபட்சம் சபைப் பிரதேசத்தில் செயற்படுகின்ற நகர அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) சபைப் பிரதேசத்திலுள்ள அரச பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(இ) சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய வணிக சபை அல்லது வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி;

(ஈ) இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் அத்தியட்சகர் அல்லது அவரது பிரதிநிதி;

(உ) நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி;

(ஊ) இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போ முகாமையாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(எ) பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிநிதி;

(ஏ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி.

சபையின் பதவி வறிதாக்கப்படுவதன் காரணத்தினால் குழுவின் அங்கத்தவர் பதவியில் வெற்றிடம் ஏதும் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நடாத்தப்படுகின்ற சபையின் அடுத்துவரும் கூட்டத்தின்போது குறித்த வெற்றிடத்துக்கு சபையின் வேறெவரேனும் உறுப்பினரை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்து நியமித்தல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அத்தகைய அங்கத்தவர் பதவியில் கடமைபுரிதலும் வேண்டும்.

மேற்படி 6 (iv), (v) மற்றும் (ix) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனுமொரு உத்தியோகத்தரால் ஏதேனுமொரு குழுக் கூட்டத்திற்கு தனிப்பட்ட ரீதியில் சமூகமளிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற மற்றும் அவரது கடமைகளை செய்கின்ற வேறொரு உத்தியோகத்தரை நிறுவனத் தலைவரின் அனுமதியுடன் குழுக் கூட்டத்திற்கு சமூகமளிக்கச் செய்வித்தல் வேண்டும்.

7. (1) குறைந்த பட்சம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது குழுவின் சாதாரண கூட்டமொன்று கூட்டப்படுதல் வேண்டும். குழுவின் தவிசாளர் பொருத்தமெனக் கருதுகின்ற ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குழுவின் விசேட கூட்டங்களைக் கூட்டுவதற்கு குழுவின் தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

(2) குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும், சபையின் தவிசாளர் அல்லது அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் சபையின் உப தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபையின் தவிசாளர் அல்லது உப தவிசாளர் ஆகிய இருவராலும் ஏதேனுமொரு குழுக் கூட்டத்திற்கு வருகை தர இயலாமற் போகின்ற போது, வருகை தந்துள்ள அங்கத்தவர்கள் 5 ஆவது துணை விதியின் (1) (iii) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அங்கத்தவர்களிலிருந்து ஒருவரை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் பொருட்டு தெரிவு செய்து நியமித்தல் வேண்டும்.

(3) குழுவின் எந்தவொரு கூட்டத்திற்குமான கூட்ட நடப்பெண் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

(4) குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானமும் அன்றைய தினம் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள குழு அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) சபையின் தவிசாளரால் குழுவில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு, குழுவின் அடுத்து வரும் கூட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களுடன் அவை ஆமோதிக்கப்பட்டதும் குழுவின் தலைமை வகிக்கும் ஆள் அதில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

**8**. குழுவின் எந்தவொரு செயலும் அல்லது கருமமும் அக்குழுவின் அங்கத்தவர்களிடையே வெற்றிடம் காணப்படுவதன் அல்லது அதன் எவரேனுமொரு அங்கத்தவர் தெரிவு செய்து நியமிக்கப்படுவதில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுவதன் காரணத்தினால் மட்டும் இரத்தானதாக அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

**9**. குழுவின் ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் அடுத்துவரும் நகர சபையின் பேரவைக் கூட்டத்தின் தகவலுக்காக சபையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**10**. குழுவினால் பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விதப்புரைகள் இருப்பின், அவை தொடர்பில் சபையின் நிதி மற்றும் கொள்கைகள் பற்றிய குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பேரவையினால் பரிசீலிக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

**11**. இத்துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் குழுவின் கருமங்களாயிருத்தல் வேண்டும்.

**12**. (1) தவிசாளர், சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் நாளாந்த அலுவல்களின் இறுதியில் அத்தகைய அலுவலகத்தை அல்லது வர்த்தக நிலையத்தை மூடிவிடுவதற்கு முன்னர், அந்த வளவினுள் ஏற்றப்பட்டுள்ள,

(அ) மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகின்ற விளக்கை ;
அல்லது

(ஆ) தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் பொருளைப் பயன்படுத்தி ஏற்றி வைக்கின்ற விளக்கை;

(இ) சந்தனக் குச்சியை அல்லது அவ்வாறான வேறு ஏதேனும் பொருளை ; அல்லது

(ஈ) அத்தகைய திறந்த தீச்சுடருடன் கூடிய வேறு ஏதேனும் பொருளை, அணைத்துவிட வேண்டுமென கட்டளையிடுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

(2) சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அல்லது கூறப்பட்ட ஏதேனுமொரு இடத்தின் அப்போதைக்கு பொறுப்பாளராக உள்ளவர் (1) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை கடைப்பிடிப்பதற்கு கடப்பாடுடையவராயிருத்தல் வேண்டும் என்பதோடு, அவர் அல்லது வேறொருவர் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் அவரது கடைமையாயிருத்தல் வேண்டும்.

செய்யக்கூடாத கருமங்கள்.

**13**. சபைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பெற்றோலியம் நிரப்பும் நிலையங்கள், பெற்றோலியம் களஞ்சியப்படுத்தி வைக்கும் இடங்கள், எல். பீ. எரிவாயுவை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யும் இடங்கள் மற்றும் எல். பீ. எரிவாயுவை களஞ்சியப்படுத்துகின்ற தாங்கிகளைப் பேணி வருகின்ற இடங்களில் –

(1) (அ) தீ பற்றவைத்தல் அல்லது தீ பற்றுவதற்கு இடமளித்தல், அல்லது

(ஆ) எவரேனும் திறந்த தீச்சுடரை ஏந்திய வண்ணம் இருத்தல் அல்லது இருப்பதற்கு இடமளித்தல் எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படுதலாகாது.

(2) காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் தியணைப்புக் கருவிகள் மற்றும் பொருட்கள் இன்றி தொழில்களைக் கொண்டு நடாத்தலாகாது.

**14**. சபைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைப் பேணி வருகின்ற ஏதேனும் கட்டடத்தில் மின் சுற்றுக்களை முழுமையான பாதுகாப்புடன் கூடியதாக பொருத்திப் பேணி வருதல் அக்கட்டடத்தின் உரிமையாளரதும் குடியிருப்பவரதும் கடமையாயிருத்தல் வேண்டுமென்பதோடு பாதுகாப்பற்ற விதத்தில் மின்கம்பி பொருத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தலாகாது

**15.** சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் தனியாளருக்கு அல்லது அரசுக்குச் சொந்தமான காணிகளில் இயற்கையாக மழை நீர் வழிந்தோடுவதற்கு தடையேற்படுத்துகின்றவாறு காணிகளை துண்டாடுதல், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக கட்டடம் அல்லது மதில் அல்லதுகட்டுகளை நிர்மாணித்தலாகாது.

**16.** சபை ஆளுகைப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய காணிகளிலும் அதே போன்று 30 பாகைகளுக்கு மேல் சரிவைக் கொண்ட காணிகளிலும் சபையின் அங்கீகாரமின்றி வீடுகளை நிர்மாணித்தலாகாது.

**17.** இயற்கைச் சரிவு 30 பாகைகளுக்கு மேல் உள்ள காணிகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்ட அளவீடுகளுக்கு ஒவ்வாத விதத்தில் மண்ணை வெட்டியெடுத்தல் அல்லது அகற்றுதல் ஆகாது.

*உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு.*

**18.** (1) உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தினுள் முன்னர் அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மற்றும் உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்களைக் காட்டுகின்ற வரைபடங்களைத் தயாரித்து தரவுத் தளமொன்றைப் பேணி வருதல் வேண்டுமென்பதோடு பொது மக்களின் தகவலுக்காக காட்சிப்படுத்தலும் வேண்டும்.

(2) ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்தத்திற்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களாக இனங்காணக்கூடியதான இடங்களை வரைபடமாக்குவதற்கும் அது பற்றி பொது மக்களுக்கு விரிவான விதத்தில் விழிப்புணர்வூட்டுவதற்கும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(3) அனர்த்த ஆபத்துள்ள இடங்கள் பற்றி பொது மக்களை விழிப்புணர்வூட்டும் பொருட்டு மும்மொழிகளிலும் பலகைகளைப் பொருத்தி இற்றைப்படுத்துதல் வேண்டும்.

(4) அனர்த்தத்திற்கு உள்ளாகலாம் என இனங்காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைக்கும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவற்றின் உதவியோடு அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**19.** (1) அனைத்து அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஏற்புடைய அங்கீகாரம் வழங்கப்படுகின்றபோது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து பெறப்படுதல் வேண்டுமென்பதோடு, அதிக ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக வேண்டி வருமெனில் அனர்த்தங்களைக் குறைக்கின்ற முறையியல்களை உள்ளடக்கியதாக பட்டயம் பெற்ற பொறியியலாளர்/கட்டடக் கலைஞர்/புவிச்சரிதவியலாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழொன்றுடன் திட்டவரைபடமொன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆளுகைப் பிரதேசத்தினுள் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தற்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுடன் தொடர்புகொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

**20.** அனர்த்தங்களுக்கு உள்ளாகிய பிரதேசங்களை சீர்நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அனர்த்தங்களுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்கும பொருட்டு தற்போது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறையியலுடன் தொடர்புகொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

**21.** அனர்த்த நிலைமையொன்று நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழில்னுட்ப உதவியுடன் குழுவினால் இனங்காணப்பட்டுள்ள,

(1) அனர்த்த ஆபத்துள்ள வலயங்கள், அத்தகைய ஒவ்வொரு வலயத்திலும் அனர்த்தம் ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் பிரதேசத்தின் அனர்த்தத்தின்போது அதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களை அகற்றுவதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களை தற்காலிகமாக தக்க வைக்கக்கூடிய இடங்கள் யாவை என்பதை இலகுவாக கண்டறியக்கூடிய விதத்தில் வரைபடமாக்கல் மற்றும் அத்தகைய வரைபடங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.

(2) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் வசிக்கும் மக்களின் பொது வாழ்க்கையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான குறுகியகால மற்றும் நீண்டகால தாக்கங்களை வெவ்வேறாக திட்டவட்டமாக இனங்காணல்.

(3) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் பாரிய அனர்த்தங்களின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங்களை தற்காலிகமாக குடியமர்த்துவதற்கு பொருத்தமானதென குழுவினால் இனங்காணப்பட்டுள்ள இடங்களுக்குத் தேவையான கருவிகளை பெறுவதற்காக உரிய நிறுவனங்களை இனங்கண்டிருத்தல்.

(4) அனர்த்த ஆபத்து நிலைமைகளைக் குறைப்பதற்கும் அனர்த்தத்திற்கு உள்ளாகியோரை சீர்நிலைக்கு கொண்டு வரும் பொருட்டும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கருமங்களை சபையின் உறுப்பினர்கள், சமுதாயம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் சேர்ந்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(5) அனர்த்த ஆபத்து நிலைமைகளை குறைப்பதற்கும் அனர்த்தத்திற்கு உள்ளானோரை சீர்நிலைக்கு கொண்டு வருவதற்குமான முன்னுரிமைகளை திட்டமிடல் மற்றும் அத்தகைய திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல், மற்றும்

(6) அனர்த்த நிலைமையொன்று உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் அங்கு வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக குழுவினால் இனங்காணப்பட்டுள்ள குழுவின் அங்கத்தவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியோடு நிவாரண அலுவல்கள் பற்றிய போதியளவு பயிற்சியை பெற்றுக் கொடுத்தல் நகர சபையின் கடமையாதல் வேண்டும்.

**22.** (1) அனர்த்தங்கள் தொடர்பாக செயலாற்றுகின்ற தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையின் பேரில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிக்கைகளை வைத்திருக்கும் பொருட்டு சபையில் உத்தியோகத்தர் ஒருவரை அல்லது ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான உபத்திரவங்கள் பற்றிய பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிவித்தலை அனர்த்த முகாமைத்துவ குழுவுக்கு, குழுவின் தவிசாளருக்கு அல்லது குழுவின் அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் அக்கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் அல்லது ஊழியரின் கடமையாதல் வேண்டும்.

(3) பிரதேச சபைப் பிரதேசத்தில் ஏதேனும் அனர்த்த ஆபத்து வலயத்தில் அனர்த்த ஆபத்து நிகழ்வதற்கு சாத்தியமுள்ளபோது, அல்லது அத்தகைய ஆபத்தொன்று நிகழ்ந்துள்ளபோது, ஆபத்துக்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள அல்லது ஆபத்துக்கு உள்ளாகியுள்ள ஆட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதைத் தீர்மானித்தல் குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அனர்த்தத்திற்கு ஆளாகியுள்ளோர்களின் உயிர்ப் பாதுகாப்பு, உணவு, குடிநீர், ஆடைகள், சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருவிகள் ஆகிய வசதிகளை வழங்குதல் தொடர்பில் தீர்மானமொன்றை அல்லது தீர்மானங்களை மேற்கொள்வதற்காக குழுவைக் கூட்டுவதற்குப் போதியளவு கால அவகாசம் இல்லையென தவிசாளர் கருதுவாராயின், அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நிவாரணம் வழங்குதல் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். எனினும், தாம் மேற்கொண்ட தீர்மானம் அல்லது தீர்மானங்கள் யாதென்பதை மூன்று பஞ்சாங்க தினங்களினுள் கூட்டப்படுகின்ற குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) (3) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்லது தீர்மானங்களின் கீழ் அனர்த்தத்திற்கு ஆளாகியோருக்கு நிவாரணங்களை வழங்க முடியுமென்பதோடு அதற்கான செலவுகள் நகர சபை நிதியத்திலிருந்து ஏற்கப்படக்கூடியதாதல் வேண்டும்.

(5) (3) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்களின் பிரகாரம் (4) ஆவது பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்காக சபையின் நிதியத்திலிருந்து ஏற்கப்பட்ட செலவுகள் யாவை என்பதைப் பற்றி குழுவினால் தயாரிக்கப்பட்ட விளக்கமானதொரு அறிக்கையை குறிப்பிட்ட கருமத்தின் பின்னர் வருகின்ற சபையின் பேரவைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.

**23.** சபை ஆளுகைப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய காணிகள் மற்றும் 30 பாகைக்கு மேற்பட்ட சரிவைக் கொண்ட காணிகளை இனங்காண்பதற்கு முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுதல் வேண்டும்.

**24.** சபைப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு வரைபடங்களில் அடையாளமிடுதலும், அத்தகைய ஒவ்வொரு பிரதேசத்தினதும் உயர்ந்தபட்ச நீர் மட்டம், மழை வீழ்ச்சி மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான முறையியலொன்றின் அல்லது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு, வீடுகளுக்கான அத்திவார மட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

**25.** சபை ஆளுகைப் பிரதேசத்தில் பெய்கின்ற மழை நீர் தடையின்றி வடிந்தோடுவதற்கு இயலுமான விதத்தில் மேற்புற வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் மழை நீர் வடிந்தோடுவதற்கு தடையாயுள்ளவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

(1) சபை ஆளுகைப் பிரதேசத்தில் அரசாங்க மற்றும் தனியார் காணிகளில், காணிகளுக்கான உப பிரிகைகளுக்கான விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும் போது மழை நீர் அனர்த்த நிலைமைகள் ஏற்படாதவாறு ஒழுங்கான விதத்தில் அகற்றுவதற்குத் தேவையான வடிகால் முறைமை திட்ட வரைபடத்தில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) சபை ஆளுகைப் பிரதேசத்தில் காணிகளின் ஏலவிற்பனைக்கு அங்கீகாரம் வழங்குகின்றபோது குறித்த காணியின், காணித்துண்டு வரைபடத்திற்கு இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**26.** சபைப் பிரதேசத்தினுள் உள்ள வீடுகளில், வர்த்தக நிலையங்களில் மற்றும் வேறேதேனும் இடங்களில் பயன்படுத்தப்படுகின்ற எல். பீ. எரிவாயு சிலிண்டர்களுக்கு இணைக்கப்படுகின்ற துணைப் பாகங்களிலிருந்து அல்லது அத்தகைய துணைப் பாகங்களை ஒன்றுடனொன்று இணைக்கின்ற இடங்களிலிருந்து எரிவாயுக் கசிவுகள் ஏற்படாதவாறு பேணி வருதல் மற்றும் அது தொடர்பிலான முன்பாதுகாப்பு மூலோபாயங்கள் தொடர்பில் சபைப் பிரதேசத்தில் வசிக்கும் மற்றும் பிரதேசத்தினுள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற ஆட்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் நகர சபையின் கடமையாதல் வேண்டும்.

**27.** எல். பீ. எரிவாயுவைப் பயன்படுத்தி கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சிகளுக்கு வருடாந்த வர்த்தக உரிமைப்பத்திரம் வழங்குகின்றபோது தீக்காப்புறுதி காப்பீடொன்று சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமாகும் என்பதோடு, தீக்காப்புறுதிக் காப்பீடு இன்றி அத்தகைய தொழில் முயற்சிகளைக் கொண்டு நடாத்துவதற்கு இடமளிக்கப்படுதலாகாது.

**28.** நகர சபை பிரதேசத்தில் கொண்டு நடாத்தப்படுகின்ற, மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுகின்ற தனியார் போதனா வகுப்புகள், வர்த்தகத் தொகுதிகள் ஆகிய இடங்களில் இடம்பெறக்கூடிய தீப்பற்றல்கள் போன்ற ஆபத்துக்களின் போது மிகவும் குறுகியதொரு நேரத்திற்குள் மக்களை அகற்றக்கூடிய வகையில் தேவையான அளவு வெளிச்செல்லும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு இத்தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதுள்ள தொழில் நிலையங்களுக்கு வர்த்தக உரிமப்பத்திரம் வழங்கப்படுதலாகாது.

**29.** பருவ மழைக் காலம் உட்பட அனைத்து சந்தர்ப்பங்களிலும் மன்னல் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல் மற்றும் இடியுடன் கூடிய காலநிலை நிலைமைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மின் உபகரணங்களைப் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு சபைப் பிரதேசத்தின் மக்களை விழிப்புணர்வூட்டல் சபையின் கடமையாதல் வேண்டும்.

**30.** அனர்த்த ஆபத்துள்ள சந்தர்ப்பங்களில் உயிர்களைக் காப்பாற்றுகின்ற மற்றும் முதலுதவி வழங்குகின்ற தொண்டர் குழுக்கள் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

**31.** (1) இத்துணைவிதியின் கீழ்,

(அ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கும் மற்றும்
(ஆ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களில் நிவாரணம் அளிப்பதற்கும்,

அனர்த்த முகாமைத்துவ நிதியத்தின் நிதித் தொகைகள் உள்ளடங்கியவாறு போதியளவு நிதி ஏற்பாடுகளின் சபையின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

இத் துணைவிதிகளின் கீழ் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் யாதென்பதை தாமதியாது கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுதல் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

**32.** (1) ஏதேனுமொரு அமைப்பினால் அல்லது எவரேனுமொரு ஆளினால், இத் துணைவிதிகளை நடைமுறைப்படுத்துகின்றபோது சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவை தீர்ப்பதற்காக நிதியுதவி வழங்கக்கூடியதாதல் வேண்டும். இன்றேல் அத்தகைய கருமங்களுக்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் அல்லது பொருள் ரீதியிலான உதவிகளை வழங்கக்கூடியதாதல் வேண்டும்.

(2) மேற்படி (1) ஆவது பந்தியின் கீழ் சபைக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் சபையின் நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படுகின்ற நிதி இத் துணைவிதிகளின் கருமங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) மேற்படி (2) ஆவது பந்தியின் கீழ் சபைக்கு செலுத்தப்படுகின்ற நிதி தொடர்பில் தனியான கணக்குத் தகவல்களைப் பேணி வருதல் செயலாளரின் கடமையாயிருத்தல் வேண்டுமென்பதோடு, குறித்த நிதியம் சபையின் அனர்த்த முகாமைத்துவக் கணக்கு என அழைக்கப்படுதலும் வேண்டும். இந்நிதியத்தில் நிதியிடுதல் பற்றிய கொள்கை மற்றும் அறிவுரைகள் தயாரிக்கப்பட்டு அதற்கு சபையின் அங்கீகாரம் பெறப்படுதலும் வேண்டும்.

(4) இத்துணைவிதியின் கீழ் சபையின் நிதியத்திற்குக் கிடைக்கின்ற மற்றும் அந்நிதியத்திலிருந்து செலவிடப்படுகின்ற நிதி பற்றிய அறிக்கை, குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆராயப்படும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு, குறித்த குழுக் கூட்டத்தின் பின்னர் நடைபெறுகின்ற சபையின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும்.

**33.** (1) நகர சபைப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின், மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு, சபை பிரதேசம் உள்ளடங்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவு அல்லது பிரிவுகளின் பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலாளர்கள், சபைப் பிரதேசத்திற்கு உரித்தாகின்ற ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள், சபைப் பிரதேசத்தினுள் மற்றும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள வேறு அரச நிறுவனங்கள் மற்றும் சபைப் பிரதேசத்தினுள் செயற்படுகின்ற அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் வசமுள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை சபையின் செயலாளர் வேண்டி நிற்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையின் செயலாளருக்குப் பெற்றுக் கொடுத்தல் நிறுவனத் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாகச் செயலாற்றுகின்ற எவரேனுமொருவர் இருப்பின் அவரின் கடமையாதல் வேண்டும்.

(2) அவ்வாறே, நகர சபையிடம் உள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை கூறப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனம் வேண்டி நிற்கின்றபோது அந்நிறுவனத்திற்கு குறித்த தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொடுத்தல் சபைச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) மேற்படி (1) வது மற்றும் (2) வது பந்திகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், எவரேனுமொருவரால் அவ்வாறு வேண்டி நிற்கப்படுகின்ற ஏதேனும் தரவுகள் அல்லது தகவல்களை வெளியே வழங்குவதன் மூலம் அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பு ஏற்படுமென குறித்த தரவுகள் மற்றும் தகவல்களை கொண்டுள்ள நிறுவனத்தின் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாக செயலாற்றுகின்ற வேறு எவரேனுமொருவரின் அபிப்பிராயமாயுள்ளபோது, அவ்வாறு அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பாக அமையக்கூடிய தரவுகள் மற்றும் தகவல்களை வெளியே வழங்குவதிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு அத்தகைய ஆளுக்கு குறித்த பந்திகளில் கட்டளைகள் தடையாயிருத்தலாகாது.

அதிகாரத்தை கையளித்தல்.

**34.** இதில் அதிகாரத்தை கையளித்தலானது, இத் துணைவிதிகளை ஒழுங்குமுறையாக்கல் தொடர்பில் தவிசாளர் அல்லது செயலாளரால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கையளித்தல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

பரிசோதித்தல் நடைமுறை மற்றும் மேலாண்மை.

**35.** இத்துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு செயலாளருக்கு அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும்.

**36**. ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு, அத்தகைய உத்தியோகத்தர் ஆரம்ப விசாரணையொன்றை நடத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார். முறைப்பாடு மற்றும் தீர்வுப்பொறிமுறை.

**37**. இத்துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். துணைவிதிகளை மீறுதல்.

**38**. இத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு ஏற்பாடும் மீறப்படுதல் பற்றிய தவறொன்று தொடர்பில் தகுந்த நீதித்துறை அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப் பட்டதன்பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் (255 ஆம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளை சட்டத்தின் பிரகாரம் 153(2) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே குறிப்பிடப்பட்ட 122(2) வது பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். அபராதம் மற்றும் தண்டனை.

**39**. சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி, இத் துணை விதிகளில், பொருள் கோடல் மற்றும் வரைவிலக்கணம்.

"தவிசாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய மாநகர சபையின் தவிசாளர் அல்லது தவிசாளரின் அதிகாரங்கள் கருமங்கள் மற்றும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆள் எவரும்,

"உப தவிசாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய நகர சபையின் உப தவிசாளரும்,

"யெலாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய நகர சபையின் செயலாளர் அல்லது செயலாளரின் அதிகாரங்கள் கருமங்கள் மற்றும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆள் எவரும்,

"நகர சபை" என்பதன் மூலம் ஏற்புடைய நகர சபையும்,

"பேரவை" என்பதன் மூலம் ஏற்புடைய நகர சபையில் மாதாந்தம் நடத்தப்படுகின்ற சபைக் கூட்டமும் எனப் பொருள்படும்,

"அனர்த்தம் மற்றும் ஆபத்து" என்பதன் மூலம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தில் "பேரழிவு" என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடல் என பொருள்படும்.

இதற்கமைய, இலங்கையிலுள்ள எவரேனும் ஆளின் அல்லது ஆட்கள் குழுக்களின் பாதுகாப்புக்கு அல்லது ஆரோக்கியத்திற்கு ஆபத்தாயிருக்கின்ற அல்லது ஆபத்தாயிருப்பதற்கு அச்சுறுத்துகின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது அழிப்பதாக அல்லது சேதப்படுத்துவதாக அச்சுறுத்துகின்ற, நிகழ்ந்துள்ள அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள இயற்கையாக அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சம்பவத்தின் தோற்றுகை எனப் பொருள் படும் என்பதோடு அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) மண் சரிவு
(ஆ) புயல்
(இ) வெள்ளம்
(ஈ) வரட்சி
(உ) கைத்தொழில் ஆபத்து
(ஊ) சுனாமி (நிலகடுக்கம் பேரைவை)
(எ) பூமியதிர்ச்சி
(ஏ) ஆகாய ஆபத்து
(ஐ) கடல்சார்ந்த ஆபத்து
(ஒ) தீ

(ஓ) தொற்று நோய் பரவுகை
(ஔ) வெடித்தல்
(க) விமானத் தாக்குதல்
(ங) குடியியல் அல்லது உள்நாட்டுக் கலகம்
(ச) இரசாயன முறை விபத்துகள்
(ஞ) கதிரியக்கமுறை அவசர நிலைமைகள்
(ட) உள்நாட்டு மற்றும் கடல்சார்ந்த எண்ணெய் சிந்துதல்கள் உள்ளடங்கலான எண்ணெய் சிந்துதல்கள்
(ண) அணுசார் பேரழிவுகள்
(த) நகரமற்றும் காட்டுத் தீ
(ந) கரையோர மண்ணரிப்பு; அத்துடன்
(ப) சுழற்காற்று, மின்னல் தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன் கூடிய கடுங்காற்று.

“நிவாரணம் வழங்குதல்” என்பதன் மூலம், இத் துணைவிதிகளின் கருமங்களுக்காக அனர்த்தம் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலுக்கமைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது ஏதேனுமொரு அனர்த்தம் நிச்சயமாக நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதொரு சந்தர்ப்பத்தில் குறித்த அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ள அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களை தற்காலிகமாக பாதுகாப்பான ஓர் இடத்தில் அல்லது இடங்களில் தங்க வைத்தல், உயிர்களை பாதுகாத்தல், முதலுதவி வழங்குதல், அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த ஆட்கள் தற்காலிக இருப்பிடங்களிலிருந்து நீங்கிச் செல்லும் வரையிலான காலத்தினுள் அத்தகைய ஆட்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் எனப் பொருள்படும் என்பதோடு அவ்வாறு இடம்பெயர்ந்துள்ள ஆட்களுக்கு சமைக்கப்பட்ட அல்லது உலர் உணவுகளை வழங்குதலும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

அட்டவணை

முதலாவது அட்டவணை

(1) சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அனர்த்தங்கள் மற்றும் அத்தகைய அனர்த்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பிரதேசங்கள் யாவை என்பதை இனங்காணல்.

(2) அனர்த்த நிலைமைகளுக்கு ஏதுவாயமைகின்ற அல்லது ஏதுவாயமையக்கூடிய காரணங்கள் யாவை என்பதைத் தீர்மானித்தல்.

(3) அனர்த்த நிலைமைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்ற காரணங்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு அனர்த்தங்களுக்கு உள்ளான ஆட்களை சீர்நிலைக்கு கொண்டுவருவதற்கும தேவையான மூலோபாயங்களை இனங்காணல்.

(4) ஏதேனுமொரு அனர்த்த நிலைமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்கள் மற்றும் குடும்பங்கள் யாவை என்பதை திட்டவட்டமாக இனங்காணல். அவ்வாறு இனங்காண்கின்றபோது மாணவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், வலதுகுறைந்தோர் பற்றிய விபரங்களை தனித்தனியாக குறித்து வைத்துக் கொள்ளல்.

(5) ஏதேனுமொரு அனர்த்த நிலைமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாகின்ற குடும்பங்களுக்கு விவாணரம் அளிக்கும் மூலோபாயங்களைத் தீர்மானித்தல்.

(6) ஏதேனுமொரு அனர்த்த நிலைமை காரணமாக இடம்பெயர்கின்ற மக்களை தற்காலிகமாக குடியமர்த்தக்கூடிய இடங்களை அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் இனங்காணல்.

(7) ஏதேனும் அனர்த்த நிலைமை காரணமாக இடம்பெயர்கின்ற மக்களுக்கு, மீளக் குடியமர்த்தப்படும் சந்தர்ப்பம் வரை உணவு, பானங்களை வழங்குகின்ற மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(8) ஏதேனும் அனர்த்த சந்தர்ப்பத்தில் சபை ஆளுகைப் பிரதேசத்தின் மக்களின் உடல்நலம் பேணல் வசதிகளை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(9) ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வதற்கு மிகச் சாத்தியமுள்ள காலகட்டங்கள் யாவை என்பதை திட்டவட்டமாக இனங்காணல்.

(10) வாகனப் போக்குவரத்துக்கு தடையேற்படுகின்ற விதத்தில நிகழ்கின்ற அல்லது நிகழ்வதற்கு சாத்தியமுள்ள எந்தவொரு அனர்த்த சந்தர்ப்பத்திலும் அத்தகைய வீதிகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்று வீதிகள் யாவை என்பதை இனங்காணல்.

*(11)* வெள்ளப் பெருக்கின் போது வீதிகள் நீரில் மூழ்குவது எந்த அளவிலான மழை வீழ்ச்சியின் போது என்பதையும் அத்தகைய மழை வீழ்ச்சி ஏற்பட்டு எவ்வளவு நேரத்தின் பின்னர் வீதிகள் நீரில் மூழ்குமென்பதையும் இனங்காணல்.

*(12)* எந்தவொரு வெள்ளப்பெருக்கின் போதும் பிரதேசம் நீரில் மூழ்குவதற்கு ஏற்ற அளவிலான மழைவீழ்ச்சி இடம்பெற்று எவ்வளவு நேரத்தில் அப்பிரதேசம் நீரில் மூழ்குமென்பதையும் சூறாவளி அல்லது அதனை ஒத்த புயல் காற்று நிலைமையின் போது நிகழ்கின்ற எதிர்பாரா மழை வீழ்ச்சி நிலைமையின் போது பிரதேசத்தில் மூழ்கின்ற இடங்களையும் இனங்காணல்.

*(13)* அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் உதவியோடு சபை ஆளுகைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் குறைந்த செலவிலான மழை வீழ்ச்சி மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகைய மழை வீழ்ச்சி மானிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

*(14)* சபைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறைகளின் மூலம் குடிநீரை பெற்றுக் கொள்வதற்கு இயலாமற் போகின்ற காலகட்டங்கள் மற்றும் காரணங்களை இனங்காணல்.

*(15)* ஆதனங்களுக்கு அல்லது மக்களுக்கு சேதம் நிகழக்கூடிய விதத்தில் சபைப் பிரதேசத்தினுள் தீப்பற்றல்கள் நிகழக்கூடிய ஆபத்தான இடங்களை இனங்காணல் மற்றும் வரைபடமாக்கல்.

*(16)* சபைப் பிரதேசத்தில் உள்ள சரிவுகளுடன் கூடிய இடங்களில் மண் சரிவு ஆபத்து நிகழக்கூடிய இடங்களை ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

*(17)* சபைப் பிரதேசத்தினுள் கொள்ளை நோய்கள் ஏற்படுதல் மற்றும் பரவுதலை கட்டுப்படுத்தும் முறையியல்களை ஏற்புடைய சுகாதார நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

*(18)* திடீரென தீப்பற்றக்கூடிய அல்லது வெடிப்புகள் நிகழக்கூடிய அபாயகரமான இரசாயனப் பொருட்களை பயன்படுத்தி, சபைப் பிரதேசத்தில் குறிப்பிட்டதொரு இடத்தில் இடம்பெறச் செய்து அல்லது இடத்திற்கிடம் எடுத்துச் சென்று செயற்படுத்தப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழிலாளர்களை இனங்காணல் மற்றும் பதிவு செய்தல்.

*(19)* குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளுள் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடையதாக திரட்டப்படுகின்ற தரவுகள் மற்றும் தகவல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பேணி வரப்படுவதை உறுதி செய்தல்.

*(20)* சபைப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கட்டியெழுப்பி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அக்குழுவிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் சபையிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களை மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவுக்கு பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்தல்.

*(21)* ஏதேனும் அனர்த்த மற்றும் ஆபத்தான சந்தர்ப்பங்களில் நிவாரணக் குழுக்களாக செயற்படுவதற்கான இயலுமையுள்ள மற்றும் இலகுவாக உதவிகளைப் பெறக் கூடிய ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் யாவை என்பதையும் அவர்களிடமுள்ள உபகரணங்களையும் இனங்காணல்.

*(22)* அனர்த்த அல்லது ஆபத்தான சந்தர்ப்பங்களில் உயிர்களைப் பாதுகாக்கின்ற பணிகளில் தன்னார்வமாக ஈடுபட விரும்புகின்ற ஆட்களை இனங்கண்டு, அவர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு போதியளவு பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

*(23)* ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வது பற்றிய முன்னறிவிப்பின் பொருட்டு அல்லது அனர்த்த நிவாரணம் வழங்கும் பொருட்டு சபையினால் கொள்வனவு செய்யப்பட வேண்டிய உபகரணங்கள் மற்றும் வேறு ஏதேனும் விடயங்கள் பற்றி சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

*(24)* குழுவினால் திரட்டப்பட்ட தரவுகள், தகவல்கள் மற்றும் இனங்காணப்பட்ட முறையியல்கள் பற்றிய குழுவின் விதப்புரைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

*3-14/1*

**மத்திய மாகாண மாகாண சபை**

................. பிரதேச சபை

**இடர் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணைவிதிகள்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆவது பந்தியின் கீழ் மத்திய மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற வகையில் என்னால் ஆக்கப்பட்ட பின்வரும் துணை விதிகள் மேற்காட்டிய பந்தியின் கீழ் இத்தால் வெளியிடப்படுகின்றது.*

*(255 ஆவது அத்தியாயமான) பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் 122 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய குறித்த கட்டளைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் (ix) ஆம் உப பிரிவுக்கமைய (ட) இடர் முகாமைத்துவத்தை முறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய துணைவிதிகளை விதிப்பதற்கென பிரதேச சபைகளுக்கு அதிகாரம் சாட்டப்பட்டுள்ளதுடன், 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவுக்கமைய ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் துணை விதிகளை மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

*சரத் ஏக்கநாயக்க,*
*மத்திய மாகாண முதலமைச்சரும்*
*உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரும்.*

*மத்திய மாகாண மாகாண சபையின் முதலமைச்சர் அலுவலகம்,*
*பல்லேகல.*
*2016, சனவரி 05.*

**அனர்த்த முகாமைத்துவம் பற்றிய துணைவிதி**

*துணைவிதியை ஆக்குவதற்கான சட்ட ஏற்பாடுகள்.*

***1.** 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 126(ix) (ஓ) ஆம் உப பிரிவின் கீழ் பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் இத்துணை விதி ஆக்கப்பட்டுள்ளது.*

***2.** இத்துணைவிதியானது, அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய எழுத்து மூலமான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு குறைநிரப்பியாகவேயன்றி, குறித்த ஏதேனும் ஏற்பாடுகளின் தத்துவத்தைக் குறைப்பதாகவோ அல்லது அத்தகைய ஏற்பாடுகளுக்கு பதிலீடாகவோ அமையுமெனக் கருதுதலாகாது.*

*துணைவிதியின் பெயர்*

***3.** இத்துணை விதியானது, பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தின் அனர்த்த முகாமைத்துவம் பற்றிய துணை விதியென எடுத்துக் காட்டப்படலாம்.*

*நோக்கம்.*

***4.** பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழ்வதற்கு சாத்தியமுள்ள அனர்த்த சந்தர்ப்பங்களை குறைத்தல், அத்தகைய ஏதேனும் அனர்த்தத்தின்போது அசௌகரியத்துக்கு உள்ளாகின்ற ஆட்கள் அல்லது உள்ளாவதற்கு சாத்தியமுள்ள ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் பிரதேச சபைகள் ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்த சந்தர்ப்பங்களில் அதனை எதிர்கொள்ளக்கூடிய விதத்தில் முன்கூட்டித் தயாராகுவதற்கும் ஆனர்த்த ஆபத்தை குறைப்பதற்கும் நடைமுறைப்படுத்த வேண்டிய பூர்வாங்க அனர்த்த செயற்பாடுகளுக்கும் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான அனைத்து விடயங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமாக இத்துணைவிதி ஆக்கப்படுகின்றது.*

*நிறைவேற்றப்பட வேண்டிய கருமங்கள்.*

***5.** பிரதேச சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் நிகழக்கூடிய அனர்த்தங்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் அத்தகைய ஏதேனும் அனர்த்த நிலைமையொன்று நிகழ்கின்ற போது அத்தகைய அனர்த்தங்களுக்கு ஆளான அல்லது ஆளாகக் கூடிய ஆட்களுக்கு நிவாரணம் அளித்தல் மற்றும் அனர்த்த ஆபத்தை குறைப்பதற்கு நடைமுறைப்படுத்தப்பட*

வேண்டிய பூர்வாங்க மூலோபாயங்களைத் தீர்மானித்தல் ஆகியன பிரதேச சபை அனர்த்த முகாமைத்துவக் குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**6**. குழுவின் அமைப்பு.-

5 ஆவது துணைவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள குழு அங்கத்தவர்களின் எண்ணிக்கை 23க்கு மேற்படாதிருத்தல் வேண்டும் என்பதோடு, பெண்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வகையில் அத்தகைய அங்கத்தவர்கள் பின்வரும் ஆட்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும் :-

(i) குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய பிரதேச சபை யின் தவிசாளர்;

(ii) குழுவின் செயலாளராக இருக்க வேண்டிய பிரதேச சபை யின் செயலாளர்;

(iii) ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் மாதம் பேரவைக் கூட்டத்தில் எதிர்வரும் ஆண்டுக்காக வாக்களிப்பின் மூலம் தெரிவுசெய்து நியமிக்கப்படும் பிரதேச சபை யின் நான்கு உறுப்பினர்கள்;

(iv) பிரதேச சபை யின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் ;

(v) பிரதேச சபை யின் தீயணைப்புப் பிரிவின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர்/பிரதான தீயணைப்பு சிப்பாய்;

(vi) 2005 ஆம்ஆண்டின் 13 ஆம் இலக்க, இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகின் உதவிப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(vii) சபைப் பிரதேசம் உள்ளடங்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிதிநி;

(viii) சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிதிநி;

(ix) சபைப் பிரதேசம் உள்ளடங்குகின்ற பொலிஸ் நிலையத்தின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிதிநி;

(x) ஒவ்வோர் ஆண்டும் திசெம்பர் மாதம் பேரவைக் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்படுவதன் மூலம் எதிர்வரும் ஆண்டுக்காக தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற -

(அ) குறைந்தபட்சம் சபைப் பிரதேசத்தில் செயற்படுகின்ற நகர அபிவிருத்தி ஆலோசனைக் குழுவின் மூன்று பிரதிநிதிகள் ;

(ஆ) சபைப் பிரதேசத்திலுள்ள அரச பாடசாலைகள் உள்ளடங்குகின்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் அல்லது அவரால் பெயர் குறிக்கப்படுகின்ற வேறெவரேனும் பிரதிநிதி;

(இ) சபை ஆளுகைப் பிரதேசத்திற்குரிய வணிக சபை அல்லது வர்த்தக சங்கத்தின் பிரதிநிதி;

(ஈ) இலங்கை மின்சார சபையின் பிரதேச மின் அத்தியட்சகர் அல்லது அவரது பிரதிநிதி;

(உ) நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது அவரது பிரதிநிதி;

(ஊ) இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போ முகாமையாளர் அல்லது அவரது பிரதிநிதி;

(எ) பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பிரதிநிதி;

(ஏ) உள்ளூராட்சி ஆணையாளர் அல்லது அவரது பிரதிநிதி.

மேற்படி 6 (iii) ஆம் உப பந்தியில் கீழ் குழுவின் அங்கத்தவர் ஒருவராக தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற எவரேனும் உறுப்பினர் குழுவின் அங்கத்துவத்திலிருந்து இராஜினாமாச் செய்வதன் காரணமாக அல்லது வேறு ஏதேனுமொரு காரணத்தினால் சபையின் பதவி வறிதாக்கப்படுவதன் காரணத்தினால் குழுவின் அங்கத்தவர் பதவியில் வெற்றிடம் ஏதும் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், அவ்வாறு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நடாத்தப்படுகின்ற சபையின் அடுத்துவரும் கூட்டத்தின்போது குறித்த வெற்றிடத்துக்கு சபையின் வேறெவரேனும் உறுப்பினரை வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்து நியமித்தல் வேண்டுமென்பதோடு, அவ்வாறு தெரிவு செய்து நியமிக்கப்படுகின்ற உறுப்பினர் அந்த ஆண்டின் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரை அத்தகைய அங்கத்தவர் பதவியில் கடமைபுரிதலும் வேண்டும்.

மேற்படி 6 (iv), (v) மற்றும் (ix) ஆம் உப பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனுமொரு உத்தியோகத்தரால் ஏதேனுமொரு குழுக் கூட்டத்திற்கு தனிப்பட்ட ரீதியில் சமுகமளிக்க முடியாதுள்ள சந்தர்ப்பத்தில் அவரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற மற்றும் அவரது கடமைககளை செய்கின்ற வேறொரு உத்தியோகத்தரை நிறுவுனத் தலைவரின் அனுமதியுடன் குழுக் கூட்டத்திற்கு சமுகமளிக்கச் செய்வித்தல் வேண்டும்.

**7.** (1) குறைந்த பட்சம் ஒவ்வொரு இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையாவது குழுவின் சாதாரண கூட்டமொன்று கூட்டப்படுதல் வேண்டும். குழுவின் தவிசாளர் பொருத்தமெனக் கருதுகின்ற ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் குழுவின் விசேட கூட்டங்களைக் கூட்டுவதற்கு குழுவின் தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

(2) குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும், சபையின் தவிசாளர் அல்லது அவர் இல்லாத சந்தர்ப்பங்களில் சபையின் உப தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபையினன் தவிசாளர் அல்லது உப தவிசாளர் ஆகிய இருவராலும் ஏதேனுமொரு குழுக் கூட்டத்திற்கு வருகை தர இயலாமற் போகின்ற போது, வருகை தந்துள்ள அங்கத்தவர்கள் 5 ஆவது துணை விதியின் (1) (iii) உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சபையின் அங்கத்தவர்களிலிருந்து ஒருவரை கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் பொருட்டு தெரிவு செய்து நியமித்தல் வேண்டும்.

(3) குழுவின் எந்தவொரு கூட்டத்திற்குமான கூட்ட நடப்பெண் மொத்த அங்கத்தவர் எண்ணிக்கையில் மூன்றில் ஒன்றாதல் வேண்டும்.

(4) குழுவினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானமும் அன்றைய தினம் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள குழு அங்கத்தவர்களின் பெரும்பான்மை வாக்குகளின் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(5) சபையின் தவிசாளரால் குழுவில் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்கள் பதிவேடொன்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டுமென்பதோடு குழுவின் அடுத்து வரும் கூட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களுடன் அவை ஆமோதிக்கப்பட்டதும் குழுவின் தலைமை வகிக்கும் ஆள் அதில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

**8.** குழுவின் எந்தவொரு செயலும் அல்லது கருமமும் அக்குழுவின் அங்கத்தவர்களிடையே வெற்றிடம் காணப்படுவதன் அல்லது அதன் எவரேனுமொரு அங்கத்தவர் தெரிவு செய்து நியமிக்கப்படுவதில் ஏதேனும் குறைபாடுகள் காணப்படுவதன் காரணத்தினால் மட்டும் இரத்தானதாக அல்லது செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

**9.** குழுவின் ஒவ்வொரு கூட்ட அறிக்கையும் அடுத்துவரும் பிரதேச சபை யின் பேரவைக் கூட்டத்தின் தகவலுக்காக சபையில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**10.** குழுவினால் பேரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் விதப்புரைகள் இருப்பின், அவை தொடர்பில் சபையின் நிதி மற்றும் கொள்கைகள் பற்றிய குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் பேரவையினால் பரிசீலிக்கக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

**11.** இத்துணைவிதிகளின் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள் குழுவின் கருமங்களாயிருத்தல் வேண்டும்.

**12.** (1) தவிசாளர், சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் நாளாந்த அலுவல்களின் இறுதியில் அத்தகைய அலுவலகத்தை அல்லது வர்த்தக நிலையத்தை மூடிவிடுவதற்கு முன்னர், அந்த வளவினுள் ஏற்றப்பட்டுள்ள –

(அ) மண்ணெண்ணெய் பயன்படுத்தப்படுகின்ற விளக்கை; அல்லது

(ஆ) தேங்காய் எண்ணெய் அல்லது வேறு ஏதேனும் பொருளைப் பயன்படுத்தி ஏற்றி வைக்கின்ற விளக்கை;

(இ) சந்தனக் குச்சியை அல்லது அவ்வாறான வேறு ஏதேனும் பொருளை ; அல்லது

(ஈ) அத்தகைய திறந்த தீச்சுடருடன் கூடிய வேறு ஏதேனும் பொருளை, அணைத்துவிட வேண்டுமென கட்டளையிடுதல் சட்டரீதியானதாதல் வேண்டும்.

(2) சபையின் ஆளுகைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள ஏதேனுமொரு அலுவலகத்தின் அல்லது வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் அல்லது கூறப்பட்ட ஏதேனுமொரு இடத்தின் அப்போதைக்கு பொறுப்பாளராக உள்ளவர் (1) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளையை கடைப்பிடிப்பதற்கு கடப்பாடுடையவராயிருத்தல் வேண்டும் என்பதோடு, அவர் அல்லது வேறொருவர் அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தல் அவரது கடைமையாயிருத்தல் வேண்டும்.

செய்யக்கூடாத கருமங்கள்.

**13**. சபைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள பெற்றோலியம் நிரப்பும் நிலையங்கள், பெற்றோலியம் களஞ்சியப்படுத்தி வைக்கும் இடங்கள், எல். பீ. எரிவாயுவை மொத்தமாக அல்லது சில்லறையாக விற்பனை செய்யும் இடங்ககள் மற்றும் எல். பீ. எரிவாயுவை களஞ்சியப்படுத்துகின்ற தாங்கிகளைப் பேணி வருகின்ற இடங்களில் –

(1) (அ) தீ பற்றவைத்தல் அல்லது தீ பற்றுவதற்கு இடமளித்தல்; அல்லது

(ஆ) எவரேனும் திறந்த தீச்சுடரை ஏந்திய வண்ணம் இருத்தல் அல்லது இருப்பதற்கு இடமளித்தல் எந்தவொரு ஆளினாலும் மேற்கொள்ளப்படுதலாகாது.

(2) காப்புறுதிச் சான்றிதழ் மற்றும் தீயணைப்புக் கருவிகள் மற்றும் பொருட்கள் இன்றி தொழில்களைக் கொண்டு நடாத்தலாகாது.

**14**. சபைப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அலுவலகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களைப் பேணி வருகின்ற ஏதேனும் கட்டடத்தில் மின் சுற்றுக்களை முழுமையான பாதுகாப்புடன் கூடியதாக பொருத்திப் பேணி வருதல் அக்கட்டடத்தின் உரிமையாளரதும் குடியிருப்பவரதும் கடமையாயிருத்தல் வேண்டுமென்பதோடு பாதுகாப்பற்ற விதத்தில் மின்கம்பி பொருத்துதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு ஏற்பாடு செய்தலாகாது.

**15**. சபை ஆளுகைப் பிரதேசத்தினுள் தனியாருக்கு அல்லது அரசுக்குச் சொந்தமான காணிகளில் இயற்கையாக மழை நீர் வழிந்தோடுவதற்கு தடையேற்படுத்துகின்றவாறு காணிகளை துண்டாடுதல், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக கட்டடம் அல்லது மதில் அல்லது கட்டுகளை நிர்மாணித்தலாகாது.

**16**. சபை ஆளுகைப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய காணிகளிலும் அதே போன்று 30 பாகைகளுக்கு மேல் சரிவைக் கொண்ட காணிகளிலும் சபையின் அங்கீகாரமின்றி வீடுகளை நிர்மாணித்தலாகாது.

**17**. இயற்கைச் சரிவு 30 பாகைகளுக்கு மேல் உள்ள காணிகளில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்ட அளவீடுகளுக்கு ஒவ்வாத விதத்தில் மண்ணை வெட்டியெடுத்தல் அல்லது அகற்றுதல் ஆகாது.

உள்ளூராட்சி நிறுவனத்தின் கடமைப் பொறுப்பு.

**18**. (1) உள்ளூராட்சி நிறுவன ஆளுகைப் பிரதேசத்தினுள் முன்னர் அனர்த்தங்களுக்கு உள்ளாகிய மற்றும் உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்களைக் காட்டுகின்ற வரைபடங்களைத் தயாரித்து தரவுத் தளமொன்றைப் பேணி வருதல் வேண்டுமென்பதோடு பொது மக்களின் தகவலுக்காக காட்சிப்படுத்தலும் வேண்டும்.

(2) ஆளுகைப் பிரதேசத்தில் அனர்த்தத்திற்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களாக இனங்காணக்கூடியதான இடங்களை வரைபடமாக்குவதற்கும் அதுபற்றி பொது மக்களுக்கு விரிவான விதத்தில் விழிப்புணர்வூட்டுவதற்கும் நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

(3) அனர்த்த ஆபத்துள்ள இடங்கள் பற்றி பொது மக்களை விழிப்புணர்வூட்டும் பொருட்டு மும்மொழிகளிலும் பலகைகளைப் பொருத்தி இற்றைப்படுத்துதல் வேண்டும்.

(4) அனர்த்தத்திற்கு உள்ளாகலாம் என இனங்காட்டப்பட்டுள்ள பிரதேசங்களில் ஏற்படக்கூடிய அனர்த்தங்களைக் குறைக்கும் பொருட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏற்புடைய ஏனைய நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவற்றின் உதவியோடு அனர்த்தங்களைக் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கையெடுத்தல் வேண்டும்.

**19.** (1) அனைத்து அபிவிருத்தி மற்றும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் ஏற்புடைய அங்கீகாரம் வழங்கப்படுகின்றபோது குறித்த பிரதேசத்தில் காணப்படுகின்ற அனர்த்த நிலைமைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் அனர்த்தங்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி அனர்த்த முகாமைத்துவ நிலையத்திலிருந்து பெறப்படுதல் வேண்டுமென்பதோடு, அதிக ஆபத்தான நிலைமைக்கு உள்ளாக வேண்டி வருமெனில் அனர்த்தங்களைக் குறைக்கின்ற முறையியல்களை உள்ளடக்கியதாக பட்டயம் பெற்ற பொறியியலாளர்/ கட்டடக் கலைஞர்/புவிச்சரிதவியலாளர் ஒருவரிடமிருந்து பெறப்பட்ட சான்றிதழொன்றுடன் திட்டவரைபடமொன்று சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

(2) ஆளுகைப் பிரதேசத்தினுள் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் தற்போது அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் தாபிக்கப்பட்டுள்ள அனர்த்த முகாமைத்துவக் குழுக்களுடன் தொடர்புகொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

**20.** அனர்த்தங்களுக்கு உள்ளாகிய பிரதேசங்களை சீர்நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை செய்தல் மற்றும் ஏனைய ஏற்புடைய நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அனர்த்தங்களுக்கு ஆளாகியுள்ளவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு தற்போது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறையியலுடன் தொடர்புகொண்டு செயலாற்றுதல் வேண்டும்.

**21.** அனர்த்த நிலைமையொன்று நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் குழுவினால் இனங்காணப்பட்டுள்ள –

(1) அனர்த்த ஆபத்துள்ள வலயங்கள், அத்தகைய ஒவ்வொரு வலயத்திலும் அனர்த்தம் ஏற்படுவதில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காரணிகள் மற்றும் பிரதேசத்தின் அனர்த்தத்தின்போது அதனால் பாதிப்புக்கு உள்ளாகின்றவர்களை அகற்றுவதற்கு மிகவும் பொருத்தமான வழிமுறைகள் மற்றும் இடம்பெயர்ந்தவர்களை தற்காலிகமாக தக்க வைக்கக்கூடிய இடங்கள் யாவை என்பதை இலகுவாக கண்டறியக்கூடிய விதத்தில் வரைபடமாக்கல் மற்றும் அத்தகைய வரைபடங்களை இற்றைப்படுத்தி பேணி வருதல்.

(2) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் வசிக்கும் மக்களின் பொது வாழ்க்கையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான குறுகியகால மற்றும் நீண்டகால தாக்கங்களை வெவ்வேறாக திட்டவட்டமாக இனங்காணல்.

(3) அனர்த்த ஆபத்துள்ள வலயங்களில் பாரிய அனர்த்தங்களின் காரணமாக இடம்பெயர நேரிடுகின்ற குடும்பங்களை தற்காலிகமாக குடியமர்த்துவதற்கு பொருத்தமானதென குழுவினால் இனங்காணப்பட்டுள்ள இடங்களுக்குத் தேவையான கருவிகளை பெறுவதற்காக உரிய நிறுவனங்களை இனங்கண்டிருத்தல்.

(4) அனர்த்த ஆபத்து நிலைமைகளைக் குறைப்பதற்கும் அனர்த்தத்திற்கு உள்ளாகியோரை சீர்நிலைக்கு கொண்டு வரும் பொருட்டும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் கருமங்களை சபையின் உறுப்பினர்கள், சமுதாயம், அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் ஏனைய தரப்பினர்களுடன் சேர்ந்து இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(5) அனர்த்த ஆபத்து நிலைமைகளை குறைப்பதற்கும் அனர்தத்திற்கும் உள்ளானோரை சீர்நிலைக்கு கொண்டு வருவதற்குமான முன்னுரிமைகளை திட்டமிடல் மற்றும் அத்தகைய திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் ; மற்றும்

(6) அனர்த்த நிலைமையொன்று உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் அங்கு வசிக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக குழுவினால் இனங்காணப்பட்டுள்ள குழுவின் அங்கத்தவர்களுக்கு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவியோடு நிவாரண அலுவல்கள் பற்றிய போதியளவு பயிற்சியை பெற்றுக் கொடுத்தல் பிரதேச சபை யின் கடமையாதல் வேண்டும்.

**22.** (1) அனர்த்தங்கள் தொடர்பாக செயலாற்றுகின்ற தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆலோசனையின் பேரில் அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் வெளியிடப்படுகின்ற பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிக்கைகளை வைத்திருக்கும் பொருட்டு சபையில் உத்தியோகத்தர் ஒருவரை அல்லது ஊழியர் ஒருவரை ஈடுபடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

(2) சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதான உபத்திரவங்கள் பற்றிய பூர்வாங்க அபாய அறிவிப்பு அறிவித்தலை அனர்த்த முகாமைத்துவ குழுவுக்கு, குழுவின் தவிசாளருக்கு அல்லது குழுவின் அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் அக்கடமை ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தரின் அல்லது ஊழியரின் கடமையாதல் வேண்டும்.

(3) பிரதேச சபைப் பிரதேசத்தில் ஏதேனும் அனர்த்த ஆபத்து வலயத்தில் அனர்த்த ஆபத்து நிகழ்வதற்கு சாத்தியமுள்ளபோது அல்லது அத்தகைய ஆபத்தொன்று நிகழ்ந்துள்ளபோது, ஆபத்துக்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள அல்லது ஆபத்துக்கு உள்ளாகியுள்ள ஆட்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதைத் தீர்மானித்தல் குழுவினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அனர்த்தத்திற்கு ஆளாகியுள்ளோர்களின் உயிர்ப் பாதுகாப்பு, உணவு, குடிநீர், ஆடைகள், சுகாதாரம் மற்றும் துப்பரவேற்பாட்டுக் கருவிகள் ஆகிய வசதிகளை வழங்குதல் தொடர்பில் தீர்மானமொன்றை அல்லது தீர்மானங்களை மேற்கொள்வதற்காக குழுவைக் கூட்டுவதற்குப் போதியளவு கால அவகாசம் இல்லையென தவிசாளர் கருதுவாராயின், அச்சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நிவாரணம் வழங்குதல் தொடர்பிலான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு தவிசாளர் அதிகாரம் கொண்டவராயிருத்தல் வேண்டும். எனினும், தாம் மேற்கொண்ட தீர்மானம் அல்லது தீர்மானங்கள் யாதென்பதை மூன்று பஞ்சாங்க தினங்களினுள் கூட்டப்படுகின்ற குழுக் கூட்டத்தில் சமர்ப்பித்தல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) (3) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அல்லது தீர்மானங்களின் கீழ் அனர்த்தத்திற்கு ஆளாகியோருக்கு நிவாரணங்களை வழங்க முடியுமென்பதோடு அதற்கான செலவுகள் பிரதேச சபை நிதியத்திலிருந்து ஏற்கப்படக்கூடியதாதல் வேண்டும்.

(5) (3) வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குழுவினால் அல்லது தவிசாளரால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அத்தீர்மானங்களின் பிரகாரம் (4) ஆவது பந்தியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்காக சபையின் நிதியத்திலிருந்து ஏற்கப்பட்ட செலவுகள் யாவை என்பதைப் பற்றி குழுவினால் தயாரிக்கப்பட்ட விளக்கமானதொரு அறிக்கையை குறிப்பிட்ட கருமத்தின் பின்னர் வருகின்ற சபையின் பேரவைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்தல் குழுவின் கடமையாதல் வேண்டும்.

**23.** சபை ஆளுகைப் பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உள்ளாகக்கூடிய காணிகள் மற்றும் 30 பாகைக்கு மேற்பட்ட சரிவைக் கொண்ட காணிகளை இனங்காண்பதற்கு முகாமைத்துவ நிலையத்தின் தொழில்நுட்ப உதவி வழங்கப்படுதல் வேண்டும்.

**24.** சபைப் பிரதேசத்தில் வெள்ளப்பெருக்குக்கு உள்ளாகக்கூடிய பிரதேசங்களை இனங்கண்டு வரைபடங்களில் அடையாளமிடுதலும், அத்தகைய ஒவ்வொரு பிரதேசத்தினதும் உயர்ந்தபட்ச நீர் மட்டம், மழை வீழ்ச்சி மற்றும் ஏனைய காரணிகளை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான முறையியலொன்றின் அல்லது கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு, வீடுகளுக்கான அத்திவார மட்டங்களுக்கான அனுமதி வழங்கப்படுதல் வேண்டும்.

**25.** சபை ஆளுகைப் பிரதேசத்தில் பெய்கின்ற மழை நீர் தடையின்றி வடிந்தோடுவதற்கு இயலுமான விதத்தில் மேற்புற வடிகாலமைப்பு முறைமையை நிர்மாணித்தல், பராமரித்தல் மற்றும் மழை நீர் வடிந்தோடுவதற்கு தடையாயுள்ளவற்றை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

(1) சபை ஆளுகைப் பிரதேசத்தில் அரசாங்க மற்றும் தனியார் காணிகளில், காணிகளுக்கான உப பிரிகைகளுக்கான விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்படும் போது மழை நீர் அனர்த்த நிலைமைகளை ஏற்படாதவாறு ஒழுங்கான விதத்தில் அகற்றுவதற்குத் தேவையான வடிகால் முறைமை திட்ட வரைபடத்தில் சேர்க்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

(2) சபை ஆளுகைப் பிரதேசத்தில் காணிகளின் ஏலவிற்பனைக்கு அங்கீகாரம் வழங்குகின்றபோது குறித்த காணியின், காணித்துண்டு வரைபடத்திற்கு இசைவுச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

**26.** சபைப் பிரதேசத்தினுள் உள்ள வீடுகளில், வர்த்தக நிலையங்களில் மற்றும் வேறேதேனும் இடங்களில் பயன்படுத்தப்படுகின்ற எல். பீ. எரிவாயு சிலிண்டர்களுக்கு இணைக்கப்படுகின்ற துணை பாகங்களிலிருந்து அல்லது அத்தகைய துணைப் பாகங்களை ஒன்றுடனொன்று இணைக்கின்ற இடங்களிலிருந்து எரிவாயுக் கசிவுகள் ஏற்படாதவாறு பேணி வருதல் மற்றும் அது தொடர்பிலான முன்பாதுகாப்பு மூலோபாயங்கள் தொடர்பில் சபைப் பிரதேசத்தில் வசிக்கும் மற்றும் பிரதேசத்தினுள் தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்ற ஆட்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் பிரதேச சபை யின் கடமையாதல் வேண்டும்.

**27.** எல். பீ. எரிவாயுவைப் பயன்படுத்தி கொண்டு நடாத்தப்படுகின்ற தொழில் முயற்சிகளுக்கு வருடாந்த வர்த்தக உரிமைப்பத்திரம் வழங்குகின்றபோது தீக்காப்புறுதி காப்பீடொன்று சமர்ப்பிக்கப்படுதல் கட்டாயமாகும்

என்பதோடு, தீக்காப்புறுதிக் காப்பீடு இன்றி அத்தகைய தொழில் முயற்சிகளைக் கொண்டு நடாத்துவதற்கு இடமளிக்கப்படுதலாகாது.

**28.** பிரதேச சபை பிரதேசத்தில் கொண்டு நடாத்தப்படுகின்ற, மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுகின்ற தனியார் போதனா வகுப்புகள், வர்த்தகத் தொகுதிகள் ஆகிய இடங்களில் இடம்பெறக்கூடிய தீப்பற்றல்கள் போன்ற ஆபத்துக்களின் போது மிகவும் குறுகியதொரு நேரத்திற்குள் மக்களை அகற்றக்கூடிய வகையில் தேவையான அளவு வெளிச்செல்லும் வாயில்கள் அமைக்கப்பட்டுள்ளதென்பது உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு இத்தேவைப்பாடுகளை நிறைவு செய்யாதுள்ள தொழில் நிலையங்களுக்கு வர்த்தக உரிமப்பத்திரம் வழங்கப்படுதலாகாது.

**29.** பருவ மழைக் காலம் உட்பட அனைத்து சந்தர்ப்பங்களிலும் மின்னல் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்புப் பெறுதல் மற்றும் இடியுடன் கூடிய காலநிலை நிலைமைகள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மீள் உபகரணங்களைப் பயன்படுத்தல் தொடர்பில் ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு சபைப் பிரதேசத்தின் மக்களை விழிப்புணர்வூட்டல் சபையின் கடமையாதல் வேண்டும்.

**30.** அனர்த்த ஆபத்துள்ள சந்தர்ப்பங்களில் உயிர்களைக் காப்பாற்றுகின்ற மற்றும் முதலுதவி வழங்குகின்ற தொண்டர் குழுக்கள் தாபிக்கப்படுதல் வேண்டும் என்பதோடு ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல் சபையின் கடமையாதல் வேண்டும்.

**31.** (1) இத்துணை விதியின் கீழ்,

(அ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களைக் குறைப்பதற்கும் ; மற்றும்

(ஆ) அனர்த்த அபாய சந்தர்ப்பங்களில் நிவாரணம் அளிப்பதற்கும்,

அனர்த்த முகாமைத்துவ நிதியத்தின் நிதித் தொகைகள் உள்ளடங்கியவாறு போதியளவு நிதி ஏற்பாடுகள் சபையின் வரவு செலவுத் திட்ட அறிக்கையில் உள்ளடக்கப்படுவதை உறுதி செய்து கொள்ளல் தவிசாளரின் கடமையாதல் வேண்டும்.

இத் துணை விதிகளின் கீழ் பேரவையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் யாதென்பதை தாமதியாது கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிக்கையிடுதல் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

**32.** (1) ஏதேனுமொரு அமைப்பினால் அல்லது எவரேனுமொரு ஆளினால், இத் துணை விதிகளை நடைமுறைப்படுத்துகின்றபோது சபைக்கு ஏற்க நேரிடுகின்ற செலவை தீர்ப்பதற்காக நிதியுதவி வழங்கக்கூடியதாதல் வேண்டும். இன்றேல், அத்தகைய கருமங்களுக்குத் தேவையான உபகரணங்கள், கருவிகள் அல்லது பொருள் ரீதியிலான உதவிகளை வழங்கக்கூடியதாதல் வேண்டும்.

(2) மேற்படி (1) வது பந்தியின் கீழ் சபைக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகள் சபையின் நிதியத்திற்கு செலுத்தப்படுதல் வேண்டும் என்பதோடு, அவ்வாறு வழங்கப்படுகின்ற நிதி இத் துணைவிதிகளின் கருமங்களுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) மேற்படி (2) வது பந்தியின் கீழ் சபைக்கு செலுத்தப்படுகின்ற நிதி தொடர்பில் தனியான கணக்குத் தகவல்களைப் பேணி வருதல் செயலாளரின் கடமையாயிருத்தல் வேண்டுமென்பதோடு, குறித்த நிதியம் சபையின் அனர்த்த முகாமைத்துவக் கணக்கு என அழைக்கப்படுதலும் வேண்டும். இந்நிதியத்தில் நிதியிடுதல் பற்றிய கொள்கை மற்றும் அறிவுரைகள் தயாரிக்கப்பட்டு அதற்கு சபையின் அங்கீகாரம் பெறப்படுதலும் வேண்டும்.

(4) இத்துணைவிதியின் கீழ் சபையின் நிதியத்திற்குக் கிடைக்கின்ற மற்றும் அந்நிதியத்திலிருந்து செலவிடப்படுகின்ற நிதி பற்றிய அறிக்கை குழுவின் ஒவ்வொரு கூட்டத்திலும் ஆராயப்படும் பொருட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென்பதோடு குறித்த குழுக் கூட்டத்தின் பின்னர் நடைபெறுகின்ற சபையின் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்படுதலும் வேண்டும்.

**33.** (1) பிரதேச சபை ப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின், மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழு, சபை பிரதேசம் உள்ளடங்குகின்ற பிரதேச செயலாளர் பிரிவு அல்லது பிரிவுகளின் பிரதேச செயலாளர் அல்லது பிரதேச செயலாளர்கள், சபைப் பிரதேசத்திற்கு உரித்தாகின்ற ஏனைய உள்ளூராட்சி நிறுவனங்கள், சபைப் பிரதேசத்தினுள் மற்றும் அதற்கு அண்மையில் அமைந்துள்ள வேறு அரச நிறுவனங்கள் மற்றும் சபைப் பிரதேசத்தினுள் செயற்படுகின்ற அரச சார்பற்ற அமைப்புகள் ஆகியவற்றின் வசமுள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை சபையின் செயலாளர் வேண்டி நிற்கின்ற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையின் செயலாளருக்குப் பெற்றுக் கொடுத்தல் நிறுவனத் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாகச் செயலாற்றுகின்ற எவரேனுமொருவர் இருப்பின் அவரின் கடமையாதல் வேண்டும்.

(2) அவ்வாறே பிரதேச சபை யிடம் உள்ள அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் தகவல்களை கூறப்பட்ட ஏதேனும் ஒரு நிறுவனம் வேண்டி நிற்கின்றபோது அந்நிறுவனத்திற்கு குறித்த தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக்கொடுத்தல் சபைச் செயலாளரின் கடமையாதல் வேண்டும்.

(3) மேற்படி (1) வது மற்றும் (2) வது பந்திகளில் எது எவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், எவரேனுமொருவரால் அவ்வாறு வேண்டி நிற்கப்படுகின்ற ஏதேனும் தரவுகள் அல்லது தகவல்களை வெளியே வழங்குவதன் மூலம் அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பு ஏற்படுமென குறித்த தரவுகள் மற்றும் தகவல்களை கொண்டுள்ள நிறுவனத்தின் தலைவரின் அல்லது அவருக்குப் பதிலாக செயலாற்றுகின்ற வேறு எவரேனுமொருவரின் அபிப்பிராயமாயுள்ளபோது, அவ்வாறு அரச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அல்லது பாதிப்பாக அமையக்கூடிய தரவுகள் மற்றும் தகவல்களை வெளியே வழங்குவதிலிருந்து தவிர்ந்ததிருப்பதற்கு அத்தகைய ஆளுக்கு குறித்த பந்திகளில் கட்டளைகள் தடையாயிருத்தலாகாது.

**34.** இதில் அதிகாரத்தை கையளித்தலானது இத் துணைவிதிகளை ஒழுங்குமுறையாக்கல் தொடர்பில் தவிசாளர் அல்லது செயலாளரால் சபையின் எந்தவொரு உத்தியோகத்தருக்கும் கையளித்தல் சட்டரீதியானதாதல் வேண்டும். *அதிகாரத்தை கையளித்தல்.*

**35.** இத்துணைவிதிகளின் கட்டளைகளை பரிசோதிப்பதற்கு செயலாளருக்கு அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு பரிசோதிப்பதற்கு அதிகாரம் கிடைக்கின்ற உரிய காலம் என்பதன் மூலம் எந்தவொரு சந்தர்ப்பமும் கருதப்படும். *பரிசோதித்தல் நடைமுறை மற்றும் மேலாண்மை.*

**36.** ஏதேனுமொரு முறைப்பாட்டை எழுத்துமூலம் அல்லது வாய்மூலம் சபையின் தவிசாளர், செயலாளர் அல்லது அதிகாரம் வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவருக்கு சமர்ப்பிக்கலாம் என்பதோடு அத்தகைய உத்தியோகத்தர் ஆரம்ப விசாரணையொன்றை நடத்தி தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பார். *முறைப்பாடு மற்றும் தீர்வுப்பொறிமுறை.*

**37.** இத்துணை விதிகளில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகளில் ஒன்றை அல்லது சிலவற்றை அல்லது அனைத்தையும் மீறுதல் தவறொன்றாகும். *துணை விதிகளை மீறுதல்.*

**38.** இத் துணைவிதிகளில் உள்ளடங்கியுள்ள எந்தவொரு ஏற்பாடும் மீறப்படுதல் பற்றிய தவறொன்று தொடர்பில் தகுந்த நீதித்துறை அதிகாரத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் குறிப்பிட்ட தவறு தொடர்பில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 (2) வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அபராதத்திற்கு உள்ளாதல் வேண்டும். அதேபோன்று குறிப்பிட்ட ஏதேனுமொரு தவறு தொடர்பில் தகுந்த அதிகாரத்தை கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்தினால் தவறொன்றுக்கு தவறாளியாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அபராதத்திற்கு உள்ளாக்கப்பட்ட எவரேனுமொருவர் குறித்த மீறலை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றபோது மேலே குறிப்பிடப்பட்ட 122(2) வது பிரிவில் குறிப்பிடப்பட்ட மேலதிக அபராதத்திற்கும் உள்ளாதல் வேண்டும். *அபராதம் மற்றும் தண்டனை.*

**39.** சொற்பிரயோகங்கள் தொடர்பில் வேறு விதத்திலான பொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி. இத் துணை விதிகளில், *பொருள் கோடல் மற்றும் வரைவிலக்கணம்.*

"தவிசாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய பிரதேச சபையின் தவிசாளர் அல்லது தவிசாளரின் அதிகாரங்கள் கருமங்கள் மற்றும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆள் எவரும்,

"உப தவிசாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய பிரதேச சபை யின் உப தவிசாளரும்,

"செயலாளர்" என்பதன் மூலம் ஏற்புடைய பிரதேச சபை யின் செயலாளர் அல்லது செயலாளரின் அதிகாரங்கள், கருமங்கள் மற்றும் கடமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆள் எவரும்,

“பிரதேச சபை ” என்பதன் மூலம் ஏற்புடைய பிரதேச சபையும்,

“பேரவை” என்பதன் மூலம் பிரதேச சபையில் மாதாந்தம் நடத்தப்படுகின்ற சபைக் கூட்டமும் எனப் பொருள்படும்.

“அனர்த்தம் மற்றும் ஆபத்து” என்பதன் மூலம் 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை பேரழிவுச் செயலாட்சிச் சட்டத்தில் “பேரழிவு” என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடல் என பொருள்படும்.

இதற்கமைய, இலங்கையிலுள்ள எவரேனும் ஆளின் அல்லது ஆட்கள் குழுக்களின் பாதுகாப்புக்கு அல்லது ஆரோக்கியத்திற்கு ஆபத்தாயிருக்கின்ற அல்லது ஆபத்தாயிருப்பதற்கு அச்சுறுத்துகின்ற அல்லது ஏதேனும் ஆதனத்தை அழிக்கின்ற அல்லது சேதப்படுத்துகின்ற அல்லது அழிப்பதாக அல்லது சேதப்படுத்துவதாக அச்சுறுத்துகின்ற, நிகழ்ந்துள்ள அல்லது நிகழக்கூடிய சாத்தியமுள்ள இயற்கையாக அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சம்பவத்தின் தோற்றுகை எனப் பொருள்படும் என்பதோடு அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) மண் சரிவு
(ஆ) புயல்
(இ) வெள்ளம்
(ஈ) வரட்சி
(உ) கைத்தொழில் ஆபத்து
(ஊ) சுனாமி (நிலநடுக்கப் பேரவை)
(எ) பூமியதிர்ச்சி
(ஏ) ஆகாய ஆபத்து
(ஐ) கடல்சார்ந்த ஆபத்து
(ஒ) தீ
(ஓ) தொற்று நோய் பரவுகை
(ஔ) வெடித்தல்
(க) விமானத் தாக்குதல்
(ங) குடியியல் அல்லது உள்நாட்டுக் கலகம்
(ச) இரசாயன முறை விபத்துகள்
(ஞ) கதிரியக்கமுறை அவசர நிலைமைகள்
(ட) உள்நாட்டு மற்றும் கடல்சார்ந்த எண்ணெய் சிந்துதல்கள் உள்ளடங்கலான எண்ணெய் சிந்துதல்கள்
(ண) அணுசார் பேரழிவுகள்
(த) நகர மற்றும் காட்டுத் தீ
(ந) கரையோர மண்ணரிப்பு; அத்துடன்
(ப) சுழற்காற்று, மின்னல் தாக்குதல் மற்றும் பலத்த இடியுடன் கூடிய கடுங்காற்று.

“நிவாரணம் வழங்குதல்” என்பதன் மூலம் இத் துணைவிதிகளின் கருமங்களுக்காக அனர்த்தம் என்பதற்கு வழங்கப்பட்டுள்ள பொருள் கோடலுக்கமைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அல்லது ஏதேனுமொரு அனர்த்தம் நிச்சயமாக நிகழ்வதற்கு சாத்தியமுள்ளதொரு சந்தர்ப்பத்தில் குறித்த அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ள அல்லது பாதிக்கப்பட்ட ஆட்களை தற்காலிகமாக பாதுகாப்பான ஓர் இடத்தில் அல்லது இடங்களில் தங்க வைத்தல், உயிர்களை பாதுகாத்தல், முதலுதவி வழங்குதல், அனர்த்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்ட மற்றும் இடம்பெயர்ந்த ஆட்கள் தற்காலிக இருப்பிடங்களிலிருந்து நீங்கிச் செல்லும் வரையிலான காலத்தினுள் அத்தகைய ஆட்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குதல் எனப் பொருள்படும் என்பதோடு அவ்வாறு இடம்பெயர்ந்துள்ள ஆட்களுக்கு சமைக்கப்பட்ட அல்லது உலர் உணவுகளை வழங்குதலும் அதில் உள்ளடங்குதல் வேண்டும்.

அட்டவணை

முதலாவது அட்டவணை

(1) சபை ஆளுகைப் பிரதேசத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அனர்த்தங்கள் மற்றும் அத்தகைய அனர்த்தங்கள் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பிரதேசங்கள் யாவை என்பதை இனங்காணல்.

(2) அனர்த்த நிலைமைகளுக்கு ஏதுவாயமைகின்ற அல்லது ஏதுவாயமையக்கூடிய காரணங்கள் யாவை என்பதைத் தீர்மானித்தல்.

(3) அனர்த்த நிலைமைகள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைகின்ற காரணங்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கும் அனர்த்தங்களுக்கு உள்ளான ஆட்களை சீர்நிலைக்கு கொண்டுவருவதற்கும் தேவையான மூலோபாயங்களை இனங்காணல்.

(4) ஏதேனுமொரு அனர்த்த நிலைமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாவதற்கு சாத்தியமுள்ள பிரதேசங்கள் மற்றும் குடும்பங்கள் யாவை என்பதை திட்டவட்டமாக இனங்காணல். அவ்வாறு இனங்காண்கின்றபோது மாணவர்கள், சிறுவர்கள், வயோதிபர்கள், வலதுகுறைந்தோர் பற்றிய விபரங்களை தனித்தனியாக குறித்து வைத்துக் கொள்ளல்.

(5) ஏதேனுமொரு அனர்த்த நிலைமையினால் சேதத்திற்கு அல்லது சிரமத்திற்கு உள்ளாகின்ற குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கும் மூலோபாயங்களைத் தீர்மானித்தல்.

(6) ஏதேனுமொரு அனர்த்த நிலைமை காரணமாக இடம்பெயர்கின்ற மக்களை தற்காலிகமாக குடியமர்த்தக்கூடிய இடங்களை அனர்த்தம் நிகழ்வதற்கு முன்னர் இனங்காணல்.

(7) ஏதேனும் அனர்த்த நிலைமை காரணமாக இடம்பெயர்கின்ற மக்களுக்கு, மீளக் குடியமர்த்தப்படும் சந்தர்ப்பம் வரை உணவு, பானங்களை வழங்குகின்ற மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(8) ஏதேனும் அனர்த்த சந்தர்ப்பத்தில் சபை ஆளுகைப் பிரதேசத்தின் மக்களின் உடல்நலம் பேணல் வசதிகளை ஏற்படுத்துவதற்கான மூலோபாயங்கள் பற்றி முன்கூட்டியே இனங்காணல்.

(9) ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வதற்கு மிகச் சாத்தியமுள்ள கால கட்டங்கள் யாவை என்பதை திட்டவட்டமாக இனங்காணல்.

(10) வாகனப் போக்குவரத்துக்கு தடையேற்படுகின்ற விதத்தில நிகழ்கின்ற அல்லது நிகழ்வதற்கு சாத்தியமுள்ள எந்தவொரு அனர்த்த சந்தர்ப்பத்திலும் அத்தகைய வீதிகளுக்குப் பதிலாக பயன்படுத்தக்கூடிய மாற்று வீதிகள் யாவை என்பதை இனங்காணல்.

(11) வெள்ளப் பெருக்கின் போது வீதிகள் நீரில் மூழ்குவது எந்த அளவிலான மழை வீழ்ச்சியின் போது என்பதையும் அத்தகைய மழை வீழ்ச்சி ஏற்பட்டு எவ்வளவு நேரத்தின் பின்னர் வீதிகள் நீரில் மூழ்குமென்பதையும் இனங்காணல்.

(12) எந்தவொரு வெள்ளப்பெருக்கின் போதும் பிரதேசம் நீரில் மூழ்குவதற்கு ஏற்ற அளவிலான மழைவீழ்ச்சி இடம் பெற்று எவ்வளவு நேரத்தில் அப்பிரதேசம் நீரில் மூழ்குமென்பதையும் சூறாவளி அல்லது அதனை ஒத்த புயல் காற்று நிலைமையின் போது நிகழ்கின்ற எதிர்பாரா மழை வீழ்ச்சி நிலைமையின் போது பிரதேசத்தில் நீரில் மூழ்கின்ற இடங்களையும் இனங்காணல்.

(13) அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினதும் வளிமண்டலவியல் திணைக்களத்தினதும் உதவியோடு சபை ஆளுகைப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சில இடங்களில் குறைந்த செலவிலான மழை வீழ்ச்சி மானிகளைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அத்தகைய மழை வீழ்ச்சி மானிகளின் தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.

(14) சபைப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள முறைகளின் மூலம் குடிநீரைப் பெற்றுக் கொள்வதற்கு இயலாமற் போகின்ற காலகட்டங்கள் மற்றும் காரணங்களை இனங்காணல்.

(15) ஆதனங்களுக்கு அல்லது மக்களுக்கு சேதம் நிகழக்கூடிய விதத்தில் சபைப் பிரதேசத்தினுள் தீப்பற்றல்கள் நிகழக்கூடிய ஆபத்தான இடங்களை இனங்காணல் மற்றும் வரைபடமாக்கல்.

(16) சபைப் பிரதேசத்தில் உள்ள சரிவுகளுடன் கூடிய இடங்களில் மண் சரிவு ஆபத்து நிகழக்கூடிய இடங்களை ஏற்புடைய தொழில்நுட்ப நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

(17) சபைப் பிரதேசத்தினுள் கொள்ளை நோய்கள் ஏற்படுதல் மற்றும் பரவுதலை கட்டுப்படுத்தும் முறையியல்களை ஏற்புடைய சுகாதார நிறுவனங்களின் உதவியோடு இனங்காணல்.

(18) திடீரென தீப்பற்றக்கூடிய அல்லது வெடிப்புகள் நிகழக்கூடிய அபாயகரமான இரசாயனப் பொருட்களை பயன்படுத்தி, சபைப் பிரதேசத்தில் குறிப்பிட்டதொரு இடத்தில் இடம்பெறச் செய்து அல்லது இடத்திற்கிடம் எடுத்துச் சென்று செயற்படுத்தப்படுகின்ற கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழிலாளர்களை இனங்காணல் மற்றும் பதிவு செய்தல்.

(19) குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளில் அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடையதாக திரட்டப்படுகின்ற தரவுகள் மற்றும் தகவல்கள் இற்றைப்படுத்தி பேணி வரப்படுவதை உறுதி செய்தல்.

(20) சபைப் பிரதேசம் உள்ளடங்கிய மாவட்டத்தின் மாவட்ட அனர்த்த முகாமைத்துவக் குழுவுடன் நெருக்கமான தொடர்புகளைக் கட்டியெழுப்பி அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அக்குழுவிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் சபையிடமுள்ள தரவுகள் மற்றும் தகவல்களை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவுக்கு பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்தல்.

(21) ஏதேனும் அனர்த்த மற்றும் ஆபத்தான சந்தர்ப்பங்களில் நிவாரணக் குழுக்களாக செயற்படுத்துவதற்கான இயலுமையுள்ள மற்றும் இலகுவாக உதவிகளைப் பெறக் கூடிய ஆட்கள், நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள் யாவை என்பதையும் அவர்களிடமுள்ள உபகரணங்களையும் இனங்காணல்.

(22) அனர்த்த அல்லது ஆபத்தான சந்தர்ப்பங்களில் உயிர்களைப் பாதுகாக்கின்ற பணிகளில் தன்னார்வமாக ஈடுபட விரும்புகின்ற ஆட்களை இனங்கண்டு அவர்களை பதிவு செய்தல் மற்றும் அவர்களுக்கு போதியளவு பயிற்சியைப் பெற்றுக் கொடுப்பதற்கு சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

(23) ஏதேனும் அனர்த்த நிலைமை நிகழ்வது பற்றிய முன்னறிவிப்பின் பொருட்டு அல்லது அனர்த்த நிவாரணம் வழங்கும் பொருட்டு சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட வேண்டிய உபகரணங்கள் மற்றும் வேறு ஏதேனும் விடயங்கள் பற்றி சபைக்கு விதப்புரைகளை சமர்ப்பித்தல்.

(24) குழுவினால் திரட்டப்பட்ட தரவுகள், தகவல்கள் மற்றும் இனங்காணப்பட்ட முறையியல்கள் பற்றிய குழுவின் விதப்புரைகளை சபைக்கு சமர்ப்பித்தல்.

3-14/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.